Registered as a news paper in sri Lanka.

# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON

"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றுகிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கின்றான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகின்றான்."

தெளிவு - 04 | 2004 - புரட்டாதி -ஐப்பசி | இதழ் - 0[illegible]

## கொழும்பு மறைமாவட்ட பேரவைக் கூட்டம்!

இலங்கைத் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட பேரவைக் கூட்டம், ஒக்டோபர் 26, 27ம் திகதிகளில், கொழும்பு மறை மாவட்ட பேரவை மன்றத்தில் நடைபெறும்.

இப்பேரவைக் கூட்டத்தினை ஆயர் டூலிப் டி சிக்கேரா ஆண்டகை தலைமைதாங்குவார். இந நிகழ்வின் ஆரம்ப நாள் வழிபாட்டில் அரும்பணி சுரேஸ் டயஸ் பண்டாரநாயக்க அருளுரையாற்றுவார். சிறப்புப் பேச்சாளராக திருமதி ராதிக்கா குமாரசுவாமி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

## பெண்களுக்கான பயிற்சி பட்டறை

இலங்கைத் திருச்சபையின் பெண்கள் ஆணைக்குழுவினால் "இன்றைய உலகில் பெண்களின் நிலை" என்ற தலைப்பில் ஒக்டோபர் மாதம் 19 - 21 திகதி வரை நல்லூர் புனித யாக்கோபு ஆலயத்தில் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் Dr.லிட்றோ, அன்னைத்தாய் அபயசேகர, அருட்பணி மாலினி தேவானந்த ஆகியோர் கலந்து சிறப்புரைகள் ஆற்றினார்கள்.

# மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை சுமந்தே வாழ்வை நகர்த்துகின்றனர்!

## யாழ். குருமுதல்வர் ஆழ்ந்த கவலை

**அரசியல் உறுதிப்பாடற்ற தன்மைகளும், பேச்சுவார்தையில் இழுபறியும், தளம்பல் நிலையும், மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. மீண்டும் யுத்தம் வெடித்துவிடுமோ? என்ற அச்ச உணர்வு ஒவ்வொரு கணப்பொழுதும் மக்களை பயமுறுத்திக்கொண்டிருக்கின்றது.**

**இத்தகைய சூழல் ஒருபுறமிருக்க, மறுபுறம் நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவும் ,மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குழைத்துள்ளது. இவ்வாறு மக்கள் தொடர்ந்தும் பல இன்னல்களை சுமந்தபடி வாழ்வை நகர்த்துகின்றனர். என்று இலங்கைத் திருச்சபையின் யாழ்.குருமுதல்வர் அருட்பணி எஸ்.பி.நேக்குமார் அடிகளார் ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில், இன்று மக்கள் தமது அன்றாட வாழ்க்கையினை கொண்டிழுக்க பெரும்பாடுபடுகின்றார்கள். காரணம் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகாித்த வண்ணம் உள்ளது. ஆனால் மக்களின் வருமானமோ உயர் வேதுமின்றி காணப்படுகின்றது.

அரிசி - கோதுமை மா - எரி பொருட்கள் - சமையல் எரி பொருட்கள் - தண்ணீர் - மின்சாரம் என்பவற்றின் விலை அதிகரிப்பினால் ஒவ்வொரு தனி மனிதனின் வயிற்றையும், வாழ்வையும் பாதிக்கின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இத்தகைய நிலைப்பாடு ஒவ்வொரு தனிமனிதனையும் உள ரீதியாகவும் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றது. அதாவது எரிச்சல் - வெறுப்புணர்வு - கோபம் போனற மறையான உணர்வுகளை வளர்க்கின்றது. இதனால் உள அமைதியை மனிதன் இழக்கின்றான். இந்த நிலை தொடருமானால் நாட்டில் வறுமை தலை தூக்கி, குற்றச்செயல்கள் - வன்முறைகள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு.

உற்பத்தியை அதிகரிக்க செய்கின்றபோதே நாட்டின் வருமானமும் அதிகரிக்கும். இதற்கேற்ப இலங்கை அரசு உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும்.

எம்நாட்டில் நிறைந்த வளங்கள் இருக்கின்றன. இவை பயன்படுத்தப்படாமல் இருப்பது பெரும் அபத்தம். இவற்றை அரசு திட்டமிட்டு வளப்படுத்தி மேம்படுத்த வேண்டும்.

மனித வளமும், இயற்கை வளமும் இணைகின்ற போதே அபிவிருத்தியும் உச்சம் அடையும.

இரண்டாம் உலகப்போரில் அணுகுண்டு வீச்சுக்கு இலக்காகி அழிவோடு, தனது அபிவிருத்திப் பாதையை முடுக்கிவிட்ட ஜப்பான் நாடு, இன்று உலகின் வசதியடைந்த நாடுகளின் வரிசையில் உச்சியில் உள்ளது.

இதற்கு காரணம் ஜப்பானியரின் சலியாத உழைப்பு மட்டுமல்ல, தமது சொந்த வளங்களைக் கொண்டு பெரும் முயற்சி எடுத்ததே அவர்களின் அதி உச்ச வளர்ச்சிக்கு காரணமாகும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)





கிளிநொச்சி கருணா நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இலவசத் தொழிற்பயிற்சி நிலையத்தின் தோற்றத்தினை முதலாவது படத்திலும், ஆயர் டூலீப் , யாழ்.குருமுதல்வர் ஆகியோருடன் இணைந்து மக்களும் புதிய கட்டடத்தின் திறப்பு விழாவிற்கு ஆயத்தமாவதை இரண்டாம் படத்திலும், (இக்கட்டடத்தை திறந்துவைத்தவர் பண்டாரவளை குருமுதல்வர் அருட்பணி டிலோ கனகசபை அடிகளார்) தொழிற்பயிற்சி நிலையத்தில் பெண்கள் தையல் பயிற்சியினை ஆர்வத்துடன் பங்கெடுப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## சர்வமத உரையாடல் மாநாடு

மெதடிஸ் திருச்சபையினால் சர்வமத உரையாடல் மாநாடு யாழ்.புனித பேதுரு ஆலயத்தில், நவம்பர் மாதம் 14-19ம் திகதி வரை நடைபெறும்.

இந்த நிகழ்வில் உள்நாட்டைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய தெரிவுகள்

இலங்கைத் திருச்சபையின் வடபகுதி வாலிபர் சங்கத்தின் வருடார்ந்த பொதுக்கூட்டம் ஒக்ரோபர் 16 ஆம் திகதி சுண்டுக்குளி புனித திருமுழுக்கு ஜோவான் ஆலயத்தில் ச.சிறில் அமலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக கே. நிலோஜியும், உபதலைவராக பி.ஜெனிற்றாவும், செயலாளராக பி.கயூரனும், உப செயலாளராக எல்.கிசோக்கும், பொருளாராக எல்.பிரேம்நாத்தும் இதழாசிரியராக வி.பி.தனேந்திராவும், வன்னிப்பிரதிநிதியாக எஸ்.தேவராணியும், வவுனியா பிரதிநிதியாக எம்.பிரசாந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதன் ஆன்மீகக் குருவாக அருட்பணி அ.ஸ்ரீபன் பணியாற்றுகின்றார்.

## ஒன்றிப்பு வழிபாடு

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்றிப்பு வழிபாடு ஒக்ரோபர் 31 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வண்ணார் பண்னை மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும்.

# சமூகவிடுதலைக்காக மதங்கள் உழைக்கவேண்டும்!

இன்றைய மதவுலகிலும் முதலாளித்துவப் போக்கு பெருமளவு காணப்படுவதை அவதானிக்கலாம். இன்றைய இறையியல் உலகத்தில் மதம் தனிமனிதனை மீட்கும் ஓர் ஆயுதமாக கருதப்படுகின்றதே அல்லாமல், சமூகத்தின் விடுதலைக்காக பாடுபடும் ஓர் அமைப்பாக மதம் இல்லை.

இவ்வாறு இந்தியாவைச் சேர்நத ஜோர்ச் தெரிவித்தார். இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச இறையியல் மாநாடு செப்ரெம்பர் மாதம் 1-5 ஆம் திகது வரை கொழும்பில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், முதலாளித்துவ விடயங்கள் அனைத்தும் தனி மனிதனை மையப்படுத்தி முடிவுகள் மேற் கொள்ளப்படுவதுபோன்று இன்றைய இறையியல் உலகம் இருப்பதை அவதானிக்கலாம்.

முதலாளித்துவ உலகம் சேவை நோக்கத்தைக் கைவிட்டு மற்றவர்களை ஒடுக்குவதுபோன்று மேலை உலகில் இருந்து வரும் இறையியல், மற்றவர்களை ஒடுக்கும் சாதனமாகப் பாவிப்பதை நோக்கலாம்.

அதாவது பெண்களின் விடுதலை, சிறுவர் உரிமைக்காகப் போராடல், போன்ற சமூக விழிப்புணர்வு தரும் காரியங்களுக்கு எதிராக செயற்பட, எம்மை சில சக்திகள் தூண்டுகின்றன. செல்வமானது ஒரு சிலரது கைக ளில் குவிவதைப் போன்று, இன்று வண்ணரசு - மீட்பு - மார்க்கம் போன்றவை ஒரு தனிமனித போதனையில் அல்லது குழுவினால், அல்லது ஒரு திருச்சபையின் உடமைப் பொருளாக மாறிவிட்டதனையும் காணலாம்.

முதலாளித்துவ உலகம் சமூகத்திற்கு நன்மை செய்யும் பொருடகளை உற்பத்தி செய்வதிலும் பார்க்க, தனிமனித லாபததினை மையமாகக்கொண்டு செயற்படுகின்றது. அதைப்போன்று தனிமனித சடங்குகளும் - சடங்காச்சாரங்களும் கட்டுப்படுத்தப்படுவதையும் நோக்கலாம்.

எனவேதான் நாம் வாழும் இன்றைய உலகில், தனி உடமை பொருளாதாரத்தின் ஒரு கருவியாக மதமும் இறையியலும் மாறிவிட்டதா, என்ற சிந்தனை எழுகின்றது என்றார்.

## திருமண வாழ்த்துக்கள்

அருட்பணி டானியல், செல்வி நிசாந்தினி ஆகிய இருவரும் தர்மபுரம் புனித லூக்கா ஆலயத்தில் ஐப்பசி மாதம் திருமண வாழ்வில் இணைந்து கொண்டனர். இவர்களை வாழ்த்துகின்றோம்.

❁❁❁

அருட்சகோதரன் கிளே பிரபாகர் - செல்வி தர்சினி ஆகியோர் தண்ணீரூற்று புனித மத்தயா ஆலயத்தில் ஆவணி மாதம் திருமண வாழ்வில் இணைந்து கொண்டனர்.. அவர்களை வாழ்த்துகின்றோம்.

## ஆயரின் வன்னி விஜயம்

கொழும்பு மறைமாவட்ட ஆயர் டுலீப் டி.சிககேரா ஆண்டகை, ஒக்ரோபர் மாதம் 8, 9, 10 ஆம் திகதிகளில் வன்னி விஜயத்தினை மேற்கொண்ட போது தண்ணீரூற்று புனித மத்தயா ஆலயத்தில் திடப்படுத்தல் ஆராதனையை நடாத்தினார்.

## கரோல் கீத ஆராதனைகள்

வடபகுதி வாலிபர்களின் கரோல் கீத ஆராதனை, உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நவம்பர் 13 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

❁❁❁

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் - சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரியும் இணைந்து நடாத்தும் கரோல் கீத ஆராதனை நவம்பர் மாதம் 7 ஆம் திகதி மாலை சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நடைபெறும்.

# நீதிக்குள் காணப்படும் அநீதியை களையும்போதே அமைதி மலரும்

உண்மையான அமைதிப் பாதையில் நாம் பணியாற்றும் போது, நீதிக்குள் காணப்படும் அநீதியை கண்டறிய அழைக்கப்படுகின்றோம்.

இவ்வாறு அருட்பணி அ.ஸ்ரீபன் உரையாற்றினார்.

இலங்கைத் திருச்சபையின் வாலிபர் சங்கம் செப்டெம்பர் மாதம் 27,28 ஆம் திகதிகளில் நீதிக்கும், அமைதிக்குமான வாழ்வு என்ற தலைப்பில் வவுனியா, தூய ஆவியானவர் ஆலயத்தில், வாலிபர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இதில் வேதப்படிப்பினை நடாத்திய அருட்பணி அ.ஸ்ரீபன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் நீதி என்பது ஆளுக்கு ஆள் இடத்திற்கு இடம் காலத்துக்கு காலம் வேறுபடும் ஒன்றாக காணப்படுகின்றது. நாம் சுயநீதியை மையமாககொண்டு செயற்படுகின்றபோது, அந்த சுயநீதிக்குள் எவ்வளவு அநீதி இருக்கின்றது என்பதை கண்டறியும்போது உண்மையான அமைதியை உண்டு பண்ணமுடியும். இல்லையேல் அது ஒரு பக்கசார்பை உண்டு பண்ணும்.

உண்மையான அமைதி மற்றவர்களின் உரிமையை மதிப்பதன் ஊடாக மலர்கின்றது. இயேசுவின் பணிவாழ்வை எடுத்துக்கொண்டால், சமூகத்தில் காணப்பட்ட உரிமையை இழந்த, இரண்டாம் தர மக்களாக காணப்பட்ட பெண்கள், சிறார்கள் போன்றவர்களின் உரிமைகளுக்காகப் போராடியதை அவதானிக்கலாம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONERY CHURCH OF CEYLON

# தெளிவுரை

## ஆனந்தக் கூத்தாடி மட்பாண்டத்தை உடைக்கலாமா?

குயவனின் கைவண்ணத்தில் உருப்பெற்ற கலைப் பொருள்கள் பண்டைக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றது. யாருமே கவனிக்காத களிமண் துணை கொண்டு, அழகிய பொருட்களைத் தயாரப்பதில் குயவர்கள் மன்னர்கள். பயனற்ற பொருளிலிருந்து பயனுள்ள பொருட்களைப் படைப்பதில் அவர்கள் தெய்வங்கள்.

ஆனால், இன்று குயவர்கள் என்றால் யார்? மட்பாண்டப் பொருள்கள் என்றால் என்ன? என்ற கேள்விகள் எழும்பும் காலம் வந்துவிட்டது. ஏனெனில் அன்று வீடுகளில் கிண்ணங்கள், தட்டுகள், சமையல் பானைகள், ஜாடிகள், வேலைப்பாடு மிக்க பூச்சாடிகள் என்பன மட்பாண்டத்தல் இருந்தது. இன்று அவை அலுமினியத்திலும், பிளாஸ்டிக் பொருட்களிலும் உருமாறி விட்டது.

வருங்கால சந்ததிக்கு இவற்றை விளக்குவதில் கடினத்தன்மை ஏற்படும். எனினும், அதிலுள்ள அர்த்தம் வியப்புக்குரியதாக இருக்கின்றது. விவிலியத்திலே எம் ஒவ்வொருவரையும் மட்பாண்டங்களாகவும், இறைவனைக் குயவனாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளை வடிவமைப்பதில் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. அநேகர் நினைப்பது பிள்ளை வளர்ந்து வருகின்றபோது தானாகத் திருந்தி, பண்புள்ளதாக உருப்பெறும், அதனை வழிப்படுத்தத் தேவையில்லை, அவ்வாறு வழிப்படுத்த முயலும்போது சிறுவர் உரிமை மீறப்படுகின்றது, என்ற கருத்தியல் இருக்கின்றது. இந்தக் கருத்தியல் தவறானதாகும்.

ஏனெனில், களிமண் லாவகமாக வளையத்தக்கதாக, போதுமானளவு இளகிய தன்மையுடன் இருக்கையிலேயே - குயவர்கள் பாண்டம் செய்ய விரும்புவார்கள். அதேசமயம் வனைக்கப்படும் வடிவில் அது நிலைத்திருக்க அது ஒரளவு உறுதியாகவும் இருக்க வேண்டும். களிமண்ணைச் சுத்தப்படுத்தி, ஆறு மாதங்களுக்குள்ளாகவே அதில் பாண்டம் செய்ய அவர்கள் விரும்புவாரகள்.

இங்கு பெற்றோர் - குயவனாகிய இறைவனின் பணியாளர்களாக அமர்த்தப்படுகின்றார்கள். ஏனெனில், குழந்தைகளை நனறாக வடிவமைப் பதில் சிறந்த பருவம், எதையும் சட்டென்று பிடிக்கக் கூடிய பருவம், பச்சிளம் பருவமாகும். இதைக் குழந்தை உளவியல் நிபுணர்கள் நிருபித்துள்ளார்கள். இதனால், குழந்தைகளைப் பண்புள்ள வழியில் வடிவமைப்பதில் பெற்றோரின் பங்களிப்பு அதிகமாகின்றது.

இங்கும்கூட பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய விடயம் - குழந்தைகள் பொதுவாகத் தமது பெற்றோரிடம் அவதானித்த விடயங்களையே செய்ய முயற்சிக்கின்றது. இதனால், பெற்றோர் அன்பு, கருணை, பண்பு, தாழ்மை, பரிவிரக்கம் போன்ற தனமைகள் கொண்ட முன்மாதிரிகளாகத் திகழவேண்டும். அப்போதுதான் மட்பாண்டங்களாகிய குழந்தைகள் ஆரோக்கியமாக உருப் பெறமுடியும்.

வாலிபர் பருவம் - பெற்றோரின் கருத்துக்கள என்பதிலும் பார்க்க நண்பர்களின் கருத்துகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் காலம். எதையும் செயயலாம், எப்படியும் செய்யலாம், மகிழ்ச்சியாக இருக்கலாம், துர்நடத்தையில் ஈடுபடலாம் என்ற கொள்கை கொண்டவர்கள். இவ்வாறு இருப்பதற்குக் காரணம், தமது சக நண்பர்கள் தம்மை ஆளுமை இல்லாதவர்கள் என்று ஓரம் கட்டிவிடுவார்கள் என்ற பயத்தால ஆகும்.

பொதுவாக இளைஞர்கள் தம்மைப்பற்றி அதிகம் சிந்திப்பது வழமை. மற்றவர்கள் தம்மை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகளவு இருக்கின்றது. இவையே அறம்சாராத நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கின்றது.

குயவனால் படைக்கப்பட்ட மட்பாண்டங்களாகிய நாம் - எப்படியும் வாழலாம் என்பதல்ல வாழ்வின் இலட்சியம். எமது வாழ்வு அறம்சார்ந்த நிலைப்பாட்டிலேயே அமையவேண்டும் என்பது தான் முக்கியம்.

இந்த உலகில் நாம் மனிதர்களாக உருப் பெறறதே ஒரு கொடை. அது இறைவன் தந்த பரிசு. ஏனெனில், நாம் தாயின் கருவில் உருப் பெறும்போது, அது சிதையாமல் இருந்தது. நாம் கருவாக உருப் பெற்றபோது, எம் பெற்றோர் கருவை சிதைக்காமல் இருந்தது. இதனால் மனிதர்களாக நடமாடுகின்றோம். சிறப்பு பெறுகின்றோம்.

இத்தகைய சிறப்புத்துவம் கொண்ட நாம், எத்தகைய ஆயுள் கொண்டு வாழ்வோம் என்பது எமக்குத் தெரியாது. அது ஆளுக்கு ஆள் மாறுபாடு கொண்டதாக இருக்கும். இது என்னவாக இருந்தாலும், நாம் வாழும் காலத்தில் எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் சிறப்பு. இதைத்தான் குயவனாகிய இறைவன் தான் உருவாக்கிய மட்பாண்டங்களாகிய எம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கின்றார்.

சிறுகதை எழுத்தாளர் கு.அழகிரிசாமி 'தவப் பயன' என்னும் சிறுகதையிலே... "மாயக் குயவர் எத்தனையோ லட்சோப லட்சம் மட்பாண்டங்களை வனைந்து கொண்டிருக்கிறார். அவற்றில் எத்தனை பங்கப்படாமல் விதித்திருக்கும் காலவரையறை வந்து சந்திக்கும் வரையிலும் பயன்பட்டு, விளைபயனகளை விண்ணுக்கு அனுப்புமோ? எத்தனை மட்பாண்டங்கள், கூத்தாடிக் கூத்தாடித் தம்மையே உடைத்துப் பாழாக்கிக் கொள்ளுமோ? மட்பாண்டங்கள், பற்பல உருவில், பற்பல வர்ணங்களில் தயாராகிக் குவிந்திருக்கின்றன...' என்கிறார்.

ஆகவே எமக்கு வீதித்திருக்கும் காலம் வரும் வரை இந்த மண்ணுலக வாழ்வினைப் பயனுள்ள தாக்கிக் கொள்வோம். ஏனோதானோ என்று வாழ்வை முன னெடுக்காது, மட்பாண்டத்தை உடைதகுக் கறைபடி யாதபடி காக்கவேண்டும். எமது மண்ணுலக தொடர்பு அறுபடும் காலத்தல் தூய உடலாகிய மட்பாண்டத்துக்குள் வைக்கப்பட்ட பூரண அமிர்தமாகிய ஆத்மா மீண்டும் குயவனிடம் செல்லும்போது தூய்மையாகச் செல்ல வழிசமைக்கவேண்டும்.

இந்த உலக இன்ப வாழ்வுக்குள்நுழைந்து எம்மையே மறந்து ஆனந்தக் கூத்தாடி, உடலாகிய மட் பாண்டத்தையும், அதற்குள் இருக்கும் அமிர்த மாகிய ஆத்மாவையும் கறைப்படுத்துவது நியாயமா? படைத்தவனுக்கு இது பிரதியுபகாரமாக அமையுமா?

ஆசிரியர்.

வருட சந்தா ரூபா. 60/= விலை ரூபா.5/=
ஆக்கங்கள் எழுதுங்கள்: தெளிவு கண்டு பிரசுரிப்போம்.
ஆசிரியர்
தெளிவு
யாழ்-குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# இலங்கை எதிர்நோக்கும் சவால்கள்

## உலகமயமாக்கலின் பார்வையில் அலசுகின்றார் அருட்பணி என்.ஜே.ஞானப்பொன்ராஜா

**மனித** வரலாற்றில், மனித எழுச்சியும் வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டுள்ளது. காலத்துக்குக் காலம் பெருமளவு மக்களில், பெருமளவு நிலப்பரப் பில் தனது ஆதிக்கத்தை மனிதத்துவம் நிலை நாட்ட விரும்பியது அவதானிக்கப்பட்டுள்ளது. ஏன், கடல் கடந்து ஏனைய நாடுகளையும், மக்களையும்கூட தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததையும், இது இன்றுவரை மேற்கொள்ளப்படுவதனையும் அவதானிக்கின்றோம். இத்தகைய அரசியல் சாம்ராச்சியம் பொருளாதார வல்லமையோடு கலந்து உலகப் பொருளாதாரத்தைத் தனக்குள் கட்டுப்படுத்த முயலுகின்றது. இதைத் தான் "உலக மயமாக்கல்" எனும் சொல்லிற்கூடாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதாரத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்காக எடுக்கபபடும் நடவடிக்கைகளே உலக மயமாக்கலின் ஒரு பகுதியாகும். இவ்வாறு உலகப் பொருளாதாரத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்கான திட்டங்களை முதலாளித்துவம் கவனமாகத் தீட்டி நடைமுறைப் படுத்துகின்றது. உலக மயமாக்கலின் பிரதான இலக்கு தொழில் நிறுவனங்களின் விருப்புக்கேற்ப மிகக் குறைந்த வேதனத்தைச் செலுத்துவதும், தொழில் வழங்குனரின் விருப்புக்கேற்ப எந்தவித மானியமும் வழஙகாமல் தொழிலிலிருந்து நீக்கவும், விடுமுறை, ஓய்வுதியம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதுமாகும்.

உலக மயமாக்கலின் இன்னொரு எதிர்பார்ப்பானது உலகில் பலம்வாய்ந்த நாடுகளான அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளது பாரிய விவசாய, கைத்தொழில் உற்பத்திப் பொருட்களையும் விற்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளல் ஆகும். உலகமயமாக்கலின் பிரதான இலக்கு உலகமயப்படுத்தப்பட்ட வியாபாரத்துக்கேற்ற உலகச்சந்தையையும், பொருளாதாரத்துக்குரிய பெருமளவு முதலீட்டைத் திரட்டுவதுமாகும். ஆனால், சாதாரண மக்களுக்குத் தேவையான சேவைகளையோ, பொருட்களையோ உற்பத்தி செய்து வழங்குவதில் கவனம் செலுத்தாது.இந்த நடவடிக்கையானது நிச்சயமாக மேலும் மக்களை வறுமைக்குள் தள்ளும். மக்களைப் பாதுகாக்கின்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற சட்டங்கள், பிரமாணங்கள் எல்லாவற்றையும் இந்த உலக மயமாக்கலானது கட்டுப்படுத்தும் அல்லது நீக்கிவிட முயலும் உலக மயமாக்கலானது இரசாயன உரப்பாவனை, கிரமிநாசினி போன்றவைகளுக் கூடாக அளவற்ற உணவு உற்பத்திக்குத் திட்ட மிடுவதற்கூடாக, சுற்றாடல் பாதிப்பை எதிர்நோக்கும் இந்நடவடிக்கையானது இன்று சுற்றாடலின் பாதுகாப்பையே கேள்விக்குரியதாக்குகின்றது.

உலக மயமாக்கலானது நாடுகளின் எல்லை களை இலகுவில் கடப்பதற்கூடாக உலகையே ஒரு கிராமத்துக்குக் கொண்டுவந்துவிட்டது. இவ் உலக மயமாக்கலானது ஒரு ஸ்திரமற்ற பொருளா தார நிலையை உருவாக்குகின்றது. இதேவேளை இந்த உலக மயமாக்கலுக்குள் பாரிய கம்பனிகள் உற்பத்தியிலும், விற்பனையிலும் வெவ்வேறு நாடுகளோடு போட்டி போடும். இந்த நடவடிக்கை பல்வேறு நாடுகளில் தத்தம் கலாச்சாரங்களுக்கு ஏற்ப காணப்பட்டு, பாரம்பரிய உற்பத்திகளைப் பாதிக்கும். இது மேலும் போட்டிகளையும், முரண் பாடுகளையும் கொண்டு வரும். பிரதேச கலாச்சாரமானது இந்த உலக மயமாக்கலால் பாதிக்கப்படுவதால் மேலும் இன முரண்பாடுகள் வளர்ந்து, ஒருவரையொருவர் கட்டுப் படுத்தவும் முயல்வர். இது போருக்கே வழிவகுக்கும். இந்தப் போரை உலக மயமாக்கல் தன் நன்மைக்காகப் பயன்படுத்தும். (ஆயுத விற்பனை) தொடர்ச்சியான போர் மக்களை மேலும் வறுமைக்குள் தளளும்

கடந்தகால காலனத்துவ ஆட்சியின் மறு வடிவமாகவே இப்போ உலக மயமாக் கலைக் காணமுடிகிறது. ஆகவே உலக மயமாக்கலானது அரசியல் ரீதியான வல்லமையாகவும், அதேநேரம் வல்லமையற்ற மக்களை வல்லமையான மக்கள் கட்டுப்படுத்தும் ஓர் நடவடிக்கையாகவே காணமுடிகின்றது.

மேலே பார்த்த விளக்கத்தின் அடிப்படையில் எமது நாடாகிய இலங்கை எவ்வாறு இந்த உலக மயமாக்கலால் பாதிக்கப்பட்டுள்ளது எனக் காட்ட விரும்புகின்றேன். 1977 ஆம் ஆண்டுவரை எமது நாடு ஓர் சோசலிச பொருளாதாரக் கொள் கையைப் பின்பற்றி வந்தது. ஆனால், 1977 ஆம் ஆண்டில் இருந்து அது முதலாளித்துவத்தை நோக்கியே நடை போடுகின்றது. 1977 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த அரசாங்கமானது அமெரிக்காவின் அரவணைப்பிலும், வழிகாட்டலிலும் தங்கியது. இது அமெரிக்காவிற்குத் தனது திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்த உதவியாக இருந்தது. எமது நாட்டை முதலாளித்துவம் நோக்கி நடாத்துவதற்காக எமது பொருளாதாரக் கொள்கைகளும் அரசியல் யாப்பும் மாற்றப்பட்டது. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு ஸ்திரமான ஓர் அரசை நிறுவக்கூடிய அதியுயர்வல் லமையை ஜனாதிபதிக்குக் கொடுத்ததனூடாக, வெளிநாட்டு முதலாளித்துவம் தமது முதலீட்டை இலங்கையில் முதலீடு செய்ய வழிவகுத்தது. இந்த 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பானது இன்று மாற்றமுடியாத யாப்பாக மாறியிருப்பதை யாவரும் அனுபவ ரீதியாக உணர்ந்துகொண்டு இருக்கின்றோம்.

1980 ஆம் ஆண்டின் அரச கணக்கீட்டின்படி 40,000 தொழிலாளர்களும், தொழிலாளர்சங்கக் கணக்கீட்டின்படி 100,000 தொழிலாளர்களும் தாம் முன்வைத்த போராட்டத்தில் வேலை இழந் தனர். இவர்களில் 100 பேர் தற்கொலை புரிந்து கொண்டதாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 1980 ஆம் ஆண்டிலிருந்து எல்லா அரசுகளும் தொழிலாளர் சங்கங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதையே இலக்காகக் கொண்டுள்ளது.

1977 ஆம் ஆண்டில் ஒரு அமெரிக்க டொலர் இலங்கை 8 ரூபாவுக்குச் சமமாகும். இன்று ஒரு அமெரிக்க டொலர் 104. திறந்த பொருளாதாரக் கொள்கையூடாக பெருமளவு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கூடாகவும் எமது அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் விலை கூடிவிட்டது. 1977 ஆம் ஆணடில் ஒரு கோப்பை தேனீர் பத்து சதமாக இருந்தது. ஆனால், இன்று பத்து ரூபா. அதாவது, பொருட்களின் விலை நூறு மடங்கால் அதி கரிப்பதைக் காட்டுகிறது. அந்த அளவுக்குத் தொழி லாளர் ஊதியம் அதிகரிக்கவில்லை. இன்று தோட்டத் தொழிலாளி பெறும் நாட்கூலி 147 ரூபா. ஏறக்குறைய 11/2 அமெரிக்க டொலர். 20 நாட்கள் வேலை செய்யும் தொழிலாளி மாதம் 2260 ரூபாவைப் பெறுவான். அதாவது 22 அமெரிக்க டொலர். சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் தொழிலாளர் மாதாந்தம் 2000 - 3000 ரூபாவரை சம்பளம் பெறுவோர் பலர் உள ளனர். அதாவது 20 - 25 அமெரிக்க டொலர். இதன் மத்தியிலும் முதலாளித்துவம் இன்னும் மலிவான தொழிலாளரைப் பெறத் துடிக்கின்றது.

### போர் தந்த அழியாத கோலங்கள்

- சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் ஆகியோர் உட்பட 80,000 பேர் இந்தக் கொடூர போரால் அழிக்கப்பட்டுள்ளனர்.
- தென்னிலங்கையில் வாழும் 33,000 பேர் கைகளை அல்லது கால்களை இழந்து ஏதோ ஒருவகையில் ஊனமாக் கப்பட்டுள்ளனர்.
- ஏறத்தாழ 1.2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்து அலைந்துள்ளார்கள்.
- வடபகுதியில் மட்டும் பெற்றோரை இழந்த பிள்ளைகள் 10,000.
- யாழ்ப்பாணத்தில் 19,100 பேரும், கிழக்குப் பகுதியில் 8,500 பேரும் விதவைகள் ஆக்கப்பட்ட வேளையில், இவர்களில் 70% மானோர் 30 வயதிலும் குறைந்த வர்கள்.
- வடபகுதியில் 56,000 வீடுகள் அழிக் கப்பட்டும், 34,000 வீடுகள் சேதமாக் கப்பட்டும் உள்ளது.
- இராணுவத்தில் 18,000 பேரும், தமிழ் போராளிகள் (L.T.T.E) 17,800 பேரும் மரணத்தை தழுவிக் கொண்டனர்.

உலக மயமாக்கலின் விபரீத விளைவுகளை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள மக்கள் அமைப்பான "மொனலர்" (MONAIAR) அமைப்புத் தரும் அறிக்கையை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**முதலாவது உணவுச் சத்துக்கள்:**

இலவசமாகக் கிடைத்த இயற்கையின் கொடைகளைக் கொண்டு, தமக்குத் தேவையான உணவுகளைப் பெற்றுத் திருப்தியாகவும், திடகாத்திரமாகவும் வாழ கிராமப் புறங்களில் வாழ்ந்த சாதா ரண மக்கள் அறிந்திருந்தார்கள். என்பது இலங் கையின் வரலாற்று உண்மை. கடந்த 25 வருடங களாக இந்த அறிவும், அனுபவமும் பலவீனப்படுததபபட்டு, அழிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையின் செல்வாக்கு எமது பொருளாதாரப் படிமுறையில் செல்வாக்குச் செலுத்தவும், தீர்மானம் எடுக்கவும் நாம் அனுமதித்திருக்கின்றோம். இவ்வாறு கடந்த காலத்தில் எமது உற்பத்தியிலும், சந்தைப்படுத்தலிலும் உலக சந்தை முழுமையான செல்வாக்கைச் செலுத்தியதால் சமூகத்தில் வறுமையில் இருப்போர், கிராமங்களில் வாழும் சிறு உற்பத்தியாளர்கள், அத்துடன் வறுமையில் இருக்கும் நுகர்வோர் யாவரும் மீள முடியாத இந்தச் சந்தையிலிருந்து வெளித்தள்ளப்பட்டுள்ளனர்.

> இலவசமாகக் கிடைத்த இயற்கையின் கொடைகளைக் கொண்டு, தமக்குத் தேவையான உணவுகளைப் பெற்றுத் திருப்தியாகவும், திடகாத்திரமாகவும் வாழ, கிராமப் புறங்களில் வாழ்ந்த சாதாரண மக்கள் அறிந்திருந்தார்கள், என்பது இலங்கையின் வரலாற்று உண்மை.
> கடந்த 25 வருடங்களாக இந்த அறிவும், அனுபவமும் பலவீனப்படுத் தப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையின் செல்வாக்கு எமது பொருளாதார முறையில் செல்வாக்குச் செலுத்தவும் தீர்மானம் எடுக்கவும் நாம் அனுமதித்து இருக்கின்றோம்.

**இரண்டாவதாகப் பால் உற்பத்தி:**

அடுத்து இந்த உலக மயமாக்கலில் பாதிக் கப்பட்டிருப்பது பால் உற்பத்தியாகும். இலங்கையில் திருப்திகரமான பால் உற்பத்தி காணப்பட்டது. பால் உற்பத்தி சிறு கைத்தொழிலாகக் கிராமிய விவசாயிகளிடம் நடைமுறைப்படுத்தப்பட்டது. முன்பு அரசின் தேசிய கொள்கைக்கூடாகப் பால உற்பத்தியை ஊக்குவிக்குமுகமாகப் பாலைச் சேகரித்துப் பாலாகவே விற்பனை செய்தது. இது மக்களுக்கு உகந்த விலையில் பாலை விற்றதோடு, கிராமிய விவசாயிகளுக்கு ஓர் ஊக்குவிப்பையும் வழங்கியது. 1980 ஆம் ஆண்டு தனியார் மயமாக்கலின் கீழ் தேசிய பால் சபையின் நடவடிக் கைகள் நிறுத்தப்பட்டன. பால் உற்பத்தியை அபி விருத்தி செய்யும் நோக்கில் "நெஸ்ரம" நிறுவனம் வரவழைக்கப்பட்டது. நெஸ்ரம் நிறுவனம் பால் சேகரிப்பை முழுமையாகத் தனதாக்கிக் கொண்டது. எவ்வாறெனினும் அவர்களால் நாட்டில் பாலை விற்கமுடியவில்லை. கிராமிய பால் உற்பத்தி பலவீனமாக்கப்பட்டு வளர்ச்சிவேகம் குறையத் தொடங்கியது. தற்போது எமது நாடு இறக்குமதி செய்யப்படும் பால் பவுடர் மாவில் தங்கியுள்ளது. பாலின் முழு ஆதிக்கமும் தற்போது அங்கர், நெஸரம், மலிபன் ஆகிய மூன்று பாரிய கம்பனிகளின் கைகளில் தங்கியுள்ளது. இது பால்மாவின் விலைகளை உயர்த்தியதால் தற்போது ஏழ்மை நிலையில் இருப்போர் தமது பிள்ளைகளுக்குப் பால் கொடுக்க முடியாதநிலை ஏற்பட்டள்ளது.

அடுத்த கவலைக்குரிய விடயம் யாதெனில் - ஆரம்ப வளர்ச்சியில் இருந்த அரச ஆதரவோடு இயங்கி வந்த சீமெந்து, மட்பாண்டம், கைத்தெறிப் புடவை, கண்ணாடி, றப்பர், மருந்து, கனிவளம் போன்றன பாதிக்கப்பட்டதாகும். தற்போது போரின காரணமாக இலங்கை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எம்மைக் கவலைக்குள்ளாக்கிய தோடு, அதிர்ச்சியூட்டும் சில தரவுகளை உங்களோடு பகிர்வதனூடாக உலகமயமாகல் எவ்வாறு அபிவிருத்தி அடைநது வருகிற நாடுகளைப் பாதிக்கச் செய்துள்ளது என்பதனை விளங்கிக் கொள்ளமுடியும். இதனை கித்துசாரக்குழு (Kitusara grop) தருகின்ற தகவல் வியப்பைத் தருகின்றன.

- சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் ஆகியோர் உட்பட 80,000 பேர் இந்தக் கொடூர போரினால் அழிக்கப் பட்டுள்ளனர்.
- தென்னிலங்கையில் வாழும் 33,000 பேர் கைகளை அல்லது கால்களை இழந்து ஏதோ வகையில் ஊனமாக்கப்பட்டுள்ளனர்.
- ஏறத்தாழ 1.2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்து அலைந்துள்ளார்கள்.
- வடபகுதியில் மட்டும் பெற்றோரை இழந்த பிள்ளைகள் 10,000.
- யாழ்ப்பாணத்தில் 19,100 பேரும், கிழக்குப் பகுதியில் 8,500 பேரும் விதவைகள் ஆக்கப்பட்ட வேளையில் இவர்களில் 70வீதமானோர் 30 வயதிலும் குறைந்தவர்கள்.
- வடபகுதியில் 56,000 வீடுகள் அழிக்கப்பட்டும், 34,000 வீடுகள் சேதமாக்கப்பட்டும் உள்ளது.
- இராணுவத்தில் 18,000 பேரும் தமிழ் போராளிகள் (L.T.T.E) 17,800 பேரும் மரணத்தைத் தழுவி உள்ளனர்.

அரசால் போருக்காகச் செலவழிக்கப்பட்ட பணம்

- 1981 ஆம் ஆண்டில் 8 பில்லியன் ஆக இருந்த போர்ச் செலவு - 1994 ஆம் ஆண்டில் 25 பில்லியனாகவும், 1998 ஆம் ஆண்டில் 57 பிலலியன் ஆகவும், 2000 ஆம் ஆண்டில் 85 பில்லி யன் ஆகவும் உயர்ந்துள்ளது.
- 1998 ஆம் ஆண்டில் பேருக்காகச் செலவழிக் கப்பட்ட பணம் 57 பில்லியனாக இருக்க கல்விக்கு 9 பல்லியனும், சுகாதாரத்திற்கு 6.8 பில்லியனும், தொழிற்நுட்ப பயிற்சிக்கு 0.4 பில்லியனும் செலவழிக்கப்பட்டது.

தமிழ் போராளிகளால் போருக்காகச் செலவழிக கப்பட்ட பணத்தொகை எவ்வளவு எனக் கூற முடி யாதுள்ளது. இப் போரை உற்றுப் பார்க்கும் போது, இந்தப் போரால் பலன் அடைந்தவர் யார்? ஆயுதங்க ளையும் போர்க் கருவிகளையும், மருந்துகளையும், உற்பத்தி செய்பவர்களே. இவ்வாறே உலக மயமாக்க லால் நாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம்.

இந்த அழிவுகளின் மத்தியில் எமது நம் பிக்கை என்ன? மீட்பும் விடுதலையுமென இறை வார்த்தை சமாதானத்தைக் குறித்து நிற்கின்றது. ஆகவே திருச்சபையானது, இந்தச் சவாலை எதிா கொள்ளத் தம்மைத் தயார்படுத்த வேண்டும். ஆகவே மக்களுக்குச் சவால் விடுக்கக்கூடிய ஆமோசுகள் எங்கே?

உலக மயமாக்கலுக்குச் சவால் விடுத்து சாட்சிகளாக நிற்கக்கூடிய கிறீஸ்துவின் சீடர் எங்கே? தற்காலத்தில் சபை என்ன செய்யமுடியும்? உலக மயமாக்கலின் தாக்கங்கள் குறித்தும், தலைவர்களுக்கும், மக்களுக்கும் பல்வேறு நிலைகளில் விளங்கிக் கொள்வதோடு அதற்கான மாற்று நடவடிக் கைகளைத் தங்கள் மட்டங்களிலேயே இனங்காணவேண்டும்.

இது குறித்து ஏற்கனவே செயறபட்டிருக்கும் குழுக்களை இனங்கண்டு அவற்றிக்குத் தோள் கொடுத்தல். எளிமையான வாழ்வு முறையைத் த்னிப்பட்ட வராகவும், சபையாகவும் வாழ்ந்து காட்டுதல்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியை ஞாபகப்படுத திக் கொள்வோம். இந்த உலகில் நாம் பறிக்கக் கூடாத கனி எது என்பது எமக்குத் தெரிகிறது. ஆனால், நாம் அதனைப் பறித்து புசிக்க ஆயத்தமாக இருக்கிறோமா? அல்லது அந்தப் பழத்தை உண்ணப் பிறரால் தூண்டப்படுகிறோமா? இறுதியாக "கித்துசாற குழுவினரால்" கூறப்பட்ட குறிப்புடன் இந்தச் சிந்தனையை முடிக்கிறேன்.

எந்தவொரு இனமும் என்னுடைய இனத்தை விட உயர்ந்ததோ, தாழ்ந்ததோ இல்லை. நீதி நிலைநாட் டப்பட்டு சமத்துவம் நிலைநாட்டப்படும் போது சமாதானம் உருவாகும். நீதியும் சமத்து வமும் மறுக்கப்படும்போது சமுதாயம் தனது குரலையெழுப் பித் தொடர்ந்தும் முயற்சிக்க வேணடும். அநீதிக்கு எதிராகக் குரல்கொடாது அமைதியாக இருப்பது சமாதானம் என்பதன் கருத்தா? சமத்துவத்துக்காக முயற்சிக்காமல் அமைதியாக இருப்பது சுதந்திரமா? இல்வே இல்லை. கர்த்தர் என்ன சொல்கிறார். நீதிக் காகத் துன்புறுவோர் பாக்கியவான்கள் என்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடையோ மிகுதி வேலையாட்களோ....

# ஆற்றலுள்ளவர்களை இனம் கண்டு திருச்சபை பயன்படுத்த வேண்டும்!

அருட்பணி ஜசக் செல்வரட்ணம்

**புலம்பெயர் தமிழ் பிள்ளைகளின் தமிழ்மொழி அறிவு எப்படியுள்ளது?**

பாடசாலைக்கு போற பிள்ளை கள் ஆங்கிலத்தில் தான் படிக்கின்றார்கள். நாங்கள் ஓய்வு நாட் பாடசாலையை ஆங்கிலத்தில்தான் நடாதது கின்றோம். ஆனால் அந்தப் பிள்ளைகள் வீட்டில் வந்தால் பெற்றோருடன் ஆங்கிலம் - தமிழ் மொழிகளிலேயே பேசுகின்றனர்.

அந்தத் தமிழ் சிலவேளை கொஞ் சம் கொஞ்சமாக மறந்து போறமாதிரி இருக் கின்றது. இவ்வாறு மறந்து போகின்றதை ஒரு நாகரீகமாகவும் நினைக்கிறார்கள். 'என்ர பிள்ளை தமிழ் கதையாது பாருங்கோ' என்று பெருமையடிக்கும் பெற்றோரும் இருககின்றனர்.

பிள்ளைகள் வளர்ந்து பல்கலைக கழகங்களுக்குப் போகும்போது, அங்கு பெரும் தாக்கத்துக்கு உட்படுகின்றது. பல்கலைக்கழக ரீதியாக நான் யார்? என் தாய் நாடு எது? ஏன் இங்கு வந்தனான்? எனக்கு ஏன் தமிழ் ஒரு பிரசசினையாக இருக்குது? என் அப்பா - அம்மா இதை ஏன் சொல்லித தர வில்லை? போன்ற கேள்விகளை எழுப்புகின்றார்கள்.

ஆனால், அரசாங்கம் இலவசமாக தமிழ் படிப்பிக்கின்றது. கன டிய அரசாங் கம் ஆசிரியர்களை வைத்து தமிழ வகுப்புக்களை நடத்துகின்றது. பல்கலைக் கழகங்களில் தமிழ் ஒரு பாடமாக இருக்கி றது.

**புலம் பெயர் தமிழர்களின் கலை நிகழ்வுகள் பற்றி ...**

புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் கலைநிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. ஏராளமான மக் கள் ஆர்வத்துடன் பங்காளராகவும், பார்வை யாளராகவும் இருக்கின்றார்கள். எமது திருச்சபையினால் "கலி யாணப் புதிர்" என்ற கலைநிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந தோம். இதில் பாடல், நடனம், நாடகம் என்பன இடம் பெற்றன. இரண்டரை மணிநேரம் கொண்ட இந்த நிகழ்வில் எல்லாத் திருச சபை மக்களும் கலந்து கொண டார்கள்.

இதைத் தவிர எமது ஆலயத்தின முதலாம் கிழமையும், மூன்றாம் கிழமை யும் நற்கருணைப் பு,சை இடம் பெறும். இரண்டாம் கிழமையும், நான்காம் கிழமையும் வழி பாடுகளில் பிரசங்கத்துக் குப் பதிலாக ஒரு சிறிய ஓரங்க நாட கத்தை இருபது நிமிடத்துக்கு ஆற்று கைப்படுத்துவோம்.

இங்கு ஒரு பிரசங்கத்திலே சொல்ல வேண்டிய விடயத்தை ஆற்றுகை மூலம சொல்லக்கூடியதாக இருக்கின றது. இந்தச் செயற்பாடு மிகவும் வரவேற்பைப் பெற் றுள்ளது.

ஆனால் இந்தமுறை இலங்கை திருச்சபையில் முன்னெடுப்பது கடின மானது. இந்தமுறையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். காலம் செல் லச் செல்ல ஆற்றுகை சார்ந்த விடயங்கள் ஆலயத்துக்குள் நுழைய வேண்டும். நுழையும் என்பது எனது நம்பிக்கை.

**முதியவர்களின் நிலைப்பாடு பற்றி உங்கள் கருத்து?**

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழருக்குக் கனடிய அரசாங்கம் எந்த வதமான குறையும் இன்றித் தாராளமாக உதவி செய்கின்றது. ஒருவேளை அங்கு பிறந்து வாழ்பவர்களிலும் பார்க்க அல்லது கனடிய பிரசாவு ரிமை பெற்றவர்களிலும் பார்க்க அகதி அநதஸ்துடனும் இருக் கின்ற வருக்குச் சில சலுகைகளும் அதிக மாகும்.

கனடிய அரசாங்கத்தின் கொள்கை யின்படி, எந்தவொரு நபரும் பட்டினி யால் சாகக் கூடாது, எந்தவொரு நபரும் நோயால் சாகக்கூடாது. இத னால இருதய சத்திரசிக்ச்சைகூட அங்கு இலவசம்தான். இந்தச் சலுகை ஏனைய நாடுகளில் இல்லை. அங்கு சிகிச்சைகளுக்காக ஏராளமான பணம் செலவுசெய்ய வேண்டும்.

இவ்வாறு சலுகைகள் இருந்த போதி லும் முதியவர்கள் பல பிரச்சினையை எதிர்நோக்குகின்றார்கள். அதாவது பிள்ளைகள் வேலைக்குச் சென்றதும், முதி யோர் வீட்டில் தனிமையில் இருக்க வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. குளிர் காலம் வந்தால் வெளியே போகமுடியாத சூழல் ஏற்படும். இந்தச் சந்தர்ப்பத்திலும் பிள்ளைகள் தமக்கு விருப்பமான தொலைக் காட்சித் தொடரைப் பார்ப்பார்கள். முதி யோர் ஓரமாகத் தனியே இருப்பார்கள். ஒட்டுமொத் தமாகச் சொல்லப்போனால் இங்கு முதியோர் மகிழ்ச்சியைத் தொலைத்தே வாழ்கின்றார் கள்.

முதியோருக்கு ஒரு வருத்தம் வந் தால், அவர்களைக் கொண்டுபோய், வைத் தியாசாலையில் போட்டு விடுவார்கள். அதன் பினனர் அவர்கள் தமது வேலை களைக் கவனிப்பார்கள். இங்கும் கூடத் தமது மனக்கவலைகளைச் சொல்லி ஆறு தல் பெறமுடியாது அந்தரிக்கின்றார்கள்.

இங்குதான் எங்களைப் போன்ற குருக்களின் பணி சிறப்பாகத் தேவைப படுகின்றது. வைத்தியசாலை ஊழியம் என்று இதனை அழைப்பார்கள். நான் இரண்டு வைத்தியசாலைகளுக்குக் குரு வாக அமர்த்தப்பட்டுள்ளேன். அது சமயம் கடந்த பணியாகும் அங்கு முதியவர்களைக் கண்டு, அவர்கள் சொல்லும் கதைகளை அமைதியாகக் கேட்டு ஆற்றுப்படுத்து கின்றேன்.

இயந்திர வாழ்க்கை வாழ் கின்ற கனடாவில் சில முதியோர் மனச்சல னம் இல்லாமல் மகிழ்வாகவும் இருககின்றார் கள். இதற்குக் காரணம் - தமக்கு ஏற்றதுபோல் பொழுதுபோகககு மையங் களை அமைத்து வாழ்வதேயாகும். அதுமட்டுமல்ல முதியோர் மன்றங்கள், தமிழ் முதியோர் மன்றங்கள் என்ற அமைப் புக்களும் அங்கு உணடு. இதில் அங்கம் வகித்துப் பொழுதை நல்லதாக மாற்று கின்றார்கள்.

கனடிய அரசாங்கம் முதியோ ருக்கு அநேக சலுகைகள் செய்திருக்கின்றது. பஸ்சில் போவ தற்கு ரிக்கட்டில் சலுகை, மருந்துக் கடைக்குப் போனால் சலுகை, சாமான் வாங்கக் கடைக்குப் போனால் சலுகை இவ்வாறு எங்கு போனாலும்

> இலங்கை திருச்சபையில் 27 வருடங்கள் பணியாற்றி தற்போது கனடாவில் கலை இலக்கிய- தொடர்பூடக வழியாக இறைபணியாற்றுகின்ற அருட்பண' ஜசக் செல்வரட்ணம் அடிகளார் தெளிவுக்குத் தந்த சிறப்புச் செவ்வி இதோ... செவ்வி கண்டவர்: வி.பி.தனா.

சலுகை ஏராளம். இங்கு சந்தோசமாக வாழ விரும் புகின்றார்கள். சந்தோசமாக வாழலாம். ஆனால், ஒப்பீட்டளவில் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களே அதிகம்.

**நீங்கள் இலங்கையை விட்டு கனடா சென்று பணியாற்றுகின்றமைக்கான காரணம் என்ன?**

எனது வாழ்க்கையில் இலங் கையை விட்டு இன்னொரு தேசத்துக்குச் சென்று பணியாற்ற ஒருபோ தும் நினைக்கவில்லை. ஆனால், நான் ஊழியத்துக்கு என்னை அர்ப்பணித்த போது, கிறிஸ்தவ சமூகத்தில் எப்படியானதொரு புதிய உத்தி முறையில் ஊழியம் செய்யலாம் என்பதை அறிந திருந தேன். எனினும் அதனை இங்கு பிரயோ கிக்க முடியவில்லை.

கலை - இலக்கியத் துறை களில் அதிக ஆர்வம்கொண்ட எனகருத் தொடர பு,டக வழியாகக் கிறிஸ்தவ விழுமியங் களைக் கொடுக்க எண்ணினேன். அதறகு எமது இலங்கைத் திருச்சபை களம் அமைத்துத்தரவில்லை.


கோயில் பு,சையுடன் மட்டுப் படுத்தப் பட்ட நான், எனது திறமைகளை வெளிக் கொணர முடியாது தண்டாடினேன். ஒரே நேரத்தில் நான்கு ஐந்து கோயில்களுக்கு பங்குத் தந் தையாக இருக்க வேணடிய சூழலும் ஏற்பட்டது. எனினும், அவ்வப் போது சந்தர்ப்பம் கிடைக்கும்போது எனது கலை ஆர்வத்தை வெளிப்படுத்தி னேன்.

சினிமா ஒரு வல்லமையான ஊட கம். கிறிஸ்தவ விழுமியங்களை அதற் கூடாகச் சொல்லுகின்ற போது மக்கள் மத்தியில் பெரும் தாக்கதை உண்டுபண்ணும் என் பது யாரும் மறுக்கமுடியாத உணமை.

இன்றைக்கு நீங்கள் பார்த்தீர்கள் என்றால், சினிமாப் படத்திலே வருகின்ற ஒரு பாட்டை மூன்று தரம் கேட்டாலே போதும். குழந்தைமுதல் பெரியவர்கள் வரை முணுமுணுக்கத் தொடங்கி விடு வார்கள். ஆனால் 25 வருடமாக 'தந்தானே துதிப்போம்...' போன்ற கீர்த்தனைப் பாடல் களை ஆலயத்தில் பாடினாலும், 26 ஆவது வருடமும் பாட்டு புத்தகம் இல்லா மல் எம்மால் பாடமுடியாது இருக்கின்றது.

காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கின்றபோது, எமது கிறிஸ்தவ பாடல் கள் மக்களின் இதயத்தை போய்ச்சேர வில்லை. இங்கு தான் நான நினைச்சன் சினிமா ஒரு வல்லமையான ஊடகம். அதனூ டாக கிறிஸ்தவத்தை பரப்பலாம் என்று. இதைத் தான் கனடாவில் அதிக மாக செய்கின்றேன்.

இலங்கை திருச்சபையில் 27 வருடங் கள் பணியாற்றியுள்ளேன். ஆனால் எனது இலக்கு நிறைவேற கூடியமாதுரி எதுவும் நடக்க வில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் 1995 ஆம் ஆண்டு கனடா, ஜேர்மன் நாடுகளுக்கு போகக் கூடிய சூழல் ஏற்பட டது. இதன் பயனாக கனடாவில் எனது இலட்சியம் நிறைவேற்ற கூடிய வகை யில் ஊழியம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. இதனால் அங்கு சென்று எனது திறமை களை முழுமையாக வெளிப்படுத்தி கலை - இலக்கியம் சார்ந்த வடயங்களை முன னெடுக்கிறேன். இதற்கு சபை மக்களும் பக்க பலமாக இருக்கின்றார்கள். நிறைய தலாநது உள்ளவர்களாகவும் இருக் கின்றார்கள்.



**தொடர்பூடக தொழிற்பாடுகள் குறித்து**

கனடாவிலே 24 மணிநேர வானொலி இயங்கிக்கொண்டி ருக்கிறது. விசேட மாக மூன்று வானொ லிகள் தொலைக காட்சி சேவைகளையும் 24 மணிநேரம் இயங்கு கின்றது. இன்னும் 12 மணி நேரம், 8 மணிநேரம், 6 மணி நேரம், இயங்கும் தொலைக் காட்சி சேவைகளும், சனி- ஞாயிறு சேவைகளும் இருக்கின்றன.

இந்தச் சேவைகளில் அரசியல் - சமூகம் சமயம் சார்ந்த விடயங்களை பற்றி ஆராய்ந்து கொள்ளக்கூடியதாக இருக் கின்றது.

நாங்களும் கிறிஸ்தவ திருப் பணி களை தொலைக்காட்சி மூலம் செய்வதற்கு அதிக வாய்ப்புண்டு. இதனை நன்றாக பயன்படுத்துகின்றோம். விசேடமாக T.V.I என்று சொல்லப் படும் ஒரு தொலைக் காட்சி மிகவும் சிறப்பாக இயங்குகின்றது.

இந்தத் தொடர்பூடகத்தில் பணியாற்று கின்ற இளைஞர்கள் தேனீக்களைப்போல ஓடிஓடி வேலை செய்கின்றார்கள். நல்ல படியாக நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்து மக்க ளுக்கு கொடுப்பதில் முன்னிக்கிறார்கள்.

**நீங்கள் கலை - இலக்கியம் சார்நத விடயங்கள் தொடர்பாக தற்காலத்தில் இலங்கையில் என்ன செய்யவுள்ளீர்கள்.....**

நான் கனடாவில் இருந்துகொண்டு இங்கு செய்யவேண்டிய தேவையில்லை. ஏனெனில், இலங்கையில் நல்ல திறமையான வர்கள். ஆற்றல் உள்ளவர்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களை பயன்படுததுவது தான் இன்றைய தேவை. இவரகளை திருச்சபை பயன்படுத்தவேண் டும். திருச்சபை மக்கள் இந்த பயனை பெற வேண்டும்.

இந்த இரண்டும் இருந்தால் தான் ஊழியம் சிறப்பாக நடைபெறும். அதாவது நான் என்ன விதத்தில் பேசுகின்றேனோ அது அவர்களுக்குப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அப்பேச்சினால் பயன் உண்டாகும். அதுபோல எந்தக் காரி யத்தையும் மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய மாதிரி காரியங்களை நகர்த்த வேண்டும்.

மக்களுக்கு எது நல்லது என்பதை ஊழியன் தீர்மானிப்பது என்பதி லும் பார்க்க, மக்கள் தமக்கு எது நல்லது என்பதை உணர்ந்து தீர்மானித்து காரியங்களை முன்னெடுக்கும்போது அது வெற்றி கொடுக்கும்.

**தெளிவு வாசகர்களுக்கு நீங் கள் கூறும் அறிவுரை என்ன?**

பொதுவாக கிறிஸ்தவ பத்திரிகைகள் தொடங்கி நிறைவாக நடாத துவது கடினம். இதனால் இடையிலே நின்று போகின்றது. இதற்கு காரணம் என்ன வென்று சொன்னால் ஒன்று வாசகரின் ஆதரவு குறைவு, மற்றது மக்கள் மத்தி யில் வாசிப்பு பழக்கம் குறைவு.

இன்று பொதுவாக மக்கள் மத்தி யில் கதைக்கின்ற பழக்கம் தான் அதிகம் வாசிக்கின்ற பழக்கம் மிகவும் அருகி விட் டது. இந்த வாசிப்புப் பழக்கத்தை மேம் படுத்துகின்ற போது, ஒருவர் தனது முதிர்வயதிலும் எவ்வித பிரச்சினையுமின்றி எந்நேரமும் வாசித்து தனது பொழு தைப் போக்க உதவியாக இருக்கும்.

வாசிப்புப் பழக்கம் இல்லாதவ ருக்கு, பெரும் பிரச்சினை. ஏனெனில் தனியாக வீட்டில் இருக்கவேண்டி வரும். அல் லது வீடுவீடாகச் சென்று கதைக்க வேண்டி வரும். பிறகு ஊர் பிரச்சினை வீட்டிற்குள் வந்து ஒரே குழப்பத்தை உண்டுபண்ணி விடுகின் றது.

வாசிப்புப் பழக்கத்தை விசேடமாக மக்கள் மத்தியில் ஊட்ட வேண்டும். இதற்கு மக்கள் விரும்பிப் படிக்கக் கூடிய வித்தில் வடிவமைத்து, தரமான ஆக்கத்தினால் நிறைத்துப் பத்திரிகை நடத்துவது அவசியம்.

இந்த வகையில் தெளிவுப் பத்திரிகை மிகவும் தரமாக வெளிவருகின்றது. அதற்கு வாசகரின் ஆதரவு என்றும் பக்க பலமாக அமைய வேண்டும் என கேட்டு, தெளிவு - ஆசியருக்கும் மற்றும் தெளிவு பத்திரிகை சார்ந்த குழுவினருக்கும் எனது பாராட்டுக்களும் - வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் தெளிவின் பணி சிறக்க இறை வனைப் பிரார்த்திக்கின்றேன்.

*

## திறம் மாற மனிதம்

இதுவும் புதுமை தான்
முற்றிப் பழுத்தும் பிஞ்சாக
இருக்கும் எனக்கு

புரியவில்லை, ஆனால்
தெளிவாக விளங்குகிறது
நான் நிற்கும் இடத்தில்
ஒத்திகை இல்லாத
நாடகம்
ஒருவித குழப்பமுமின்றி...

வேடம் போடவில்லை
பொறுத்தமான பாத்திரங்கள்
மானிடத்தை கொச்சைப்படுத்தும்
இந்த மனிதர்கள்,
அரசாளும் கோட்டையில்...

வெட்டிப் பேசத் தெரிந்த எனக்கு
வச்சுப் பேசத் தெரியவில்லை
புதுமை பேசத் தெரிந்த எனக்கு
புகழ்ந்து பேசத் தெரியவில்லை
தெரிந்திருந்தால்
என் நிறம் மாறியிருக்கும்...
மாலையும் கழுத்துவரை
ஏறியிருக்கும்...

நித்திரை இல்லை, ஆனால்
இறுக மூடிய என்
இமையில் தெரிகின்றது
ஒரேயொரு காட்சி...
இது கானவல்ல...
நிலத்தில் கால் பதித்து
நடக்கும் எனக்கு
தெளிவாக தெரியும்
இருட்டிலும் என் வீடு.

அசைக்கத் தெரிந்த எனக்கு
அசையத் தெரியவில்லை
பணியத் தெரிந்த எனக்கு
குனியத் தெரியவில்லை
தெரிந்திருந்தால்...
என் நிறம் மாறியிருக்கும்...

வாழை ராறோ
குடத்தனை

# மறக்க முடியுமா? நான்கு தசாப்த காலத்தை

திரு.செ.துரைராஜசிங்கம் - கொக்குவில்.

காலம் சென்ற திருமதி தேவருள - இராஜதுரை 13-05-1920 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் 21-06-2004 ஆம் ஆண்டு இறைவனடி சேரும் காலம் வரை, அதாவது 84 ஆண்டுகள் கொக்குவில், புனித திருத்துவ ஆலயத்தில் அங்கத்தவராக இருந்து ஆற்றிய பணிகள் என்றும் மனங் கொள்ளத்தக்கது. திருமதி தேவ ருள், தமது கணவனை 1964 ஆம் ஆண்டு இழந்து, தனிமையாக வாடி காலத்தை கழிக்காமல், கொக்குவில் புனித திருத்துவ தேவாலயத்தின் பராமரிப்பாளராக 40 வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

இவர் ஆலய செயற்பாடுகள் எல் லாவற்றையும் ஒழுங்காகவும், வரிசைக் கிரகமாகவும் செய்து, எல்லாரின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார் என்பது குறிப் படத்தக்கது. ஆலய அக - புறச சூழலை எப்போதும் துப்பரவாக வைத்திருந்த திருமதி தேவருள் 1995 ஆம் ஆண்டு இவரின் பிள் ளைகள் பேரப்பிள்ளைகள் புலம் பெயர்ந்து கிளிநொச்சியில் வசித்த போதும் எந்தவித பயமின்றி கொக குவிலில் தங்கி ஆலயத்தை பாது காத்தும் - பராமரித்தும் வந்தார்.

போர்ச்சூழல் தணிந்தபோதும், அவரின் பிள்ளைகள் - பேரப்பிள்ளை கள் மீண்டும் வராத நிலையில் தனக்கு தெரிந்த உறவுக்காரர் வீட்டில் தங்கி ஆலயத்தை பராமரித்தார். இது அவரின் அர்ப்பண வாழ்வுக்கு கட்டியம் கூறும்.

கடந்த 40 வருடகாலம் கொக்கு வில் புனித திருத்துவ ஆலயத்தின் பராமரிப்பாளராக தன்னையே முழுமையாக அர்ப் பணித்து, பணியாற்றியமை சிறப் பானது. ஆலய வரலாற்றில் திரு மதி தேவருள் இராசதுரைக்கு சிறப்பான இடமுண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

அன்னாரின் இழப்பு கொக்கு வில் புனித திருத்துவ ஆலயத் திற்கே பேர் இழப்பு, இதை ஈடு செய்வது கடினம். இத்தகைய முன்னோரின் அர்ப்பண வாழ்வு எமக்கு முன்மாதிரியே!




**பெ**ரிய மீனுக்கு அன்று சரியான வேட்டை. வயிறு நிறைந்திருந்தது. கரையோரப் பாறையருகே இளவெயி லின் சுகத்தில் நீந்திக் கொண்டிருந்தது.

வயிறு நிறைந்திருந்ததால், ஆத்மா வும் புது மலரென பிரகாசித்திருந்தது.

பு,வுலகும், புத்துணர்வும் ஆத்ம தெளிவினை ஏற்படுத்தியிருந்தது.

எதிர்பாராத விதமாக அந்த மீன்குஞ்சு அதன் வழியில் தடைப் பட்டது. ஒரு கணம் அதனை விழுங்கிவிடலாமா? என எண்ணி யது. வேண்டாம். இதனை உண்டு ஆகப்போவதென்ன? விட்டுவிட்டது. சின்ன மீன் ஆச்சரியப்பட்டது.

"புனித மீன் போலும்!" என எண்ணிக்கொண்டது. அந்தச் செய்தியைப் பரப்ப வெகுவேகமாகக் கரையோரமாக நீந்திச் சென் றது.

இன்னொருநாள் மீனை வேடிக்கை பார்க்க, சின்ன மீன்கள் கூட்டம் வெளியே வந்தன. என்ன பயங்கரம்.

பெரியதொரு மீன் கூட்டத்திடையே, பெருமீன் சுழன்று சுழன்று வேட்டையாடிக் கொண்டிருந் தது. நீரின் தெளிதல் கலங்க லாயிருந்தது.

'நீங்களா?... நீங்களா?... இப்படி?...' - சின்ன மீன்கள் அலறின.

## பசி

'ஆமாம் வேறுவழியில்லை. இவர்களெல்லாம் உங்களை உண்ணக் கூட்டமாக வந்தவர் கள். உங்களுக்குப் பாதுகாப் பளிக்க எனக்கு வேறுவழி தெரியவில்லை...?

சின்ன மீன் கூட்டங்கள் அதனை வலம் வந்தன. வழி பட்டன. "நீ மகாத்மா!... எங்களுக்கு வாழ்வளித்த தெய்வம்!"

ஒருநாள் கடல் வற்றியது. கரை சேற்று நிலமாகி நாறியது. கரையோரப் பறவையினம் கடலில் இறங்கின.

சின்ன மீன்கள் வேடிக்கை பார்க்கக் கடலில் இறங்கின. பறவைகளும் பாய்ந்தன. பதகளிப்புக் கடலில் நிகழ்ந்தது. அப்போது ஒரு பாறை வெடிப்பின் மத்தியிலிருந்து அந்தப் பெருமீன் புறப்பட்டது. பறவையினம் பறந்தன. சின்ன மீன்கள் ஆரவாரித்தன. 'எங்களைக் காக்க ரட்சகன் வந்துவிட்டான்.' ஆனால் என்ன ஆச்சரியம் சின்ன மீன்கள் அதன் பெருவயிற்றுக்கு இரையாகின. 'ஏன்?' - மீன்கள் அலறின

'பசி! பெரும்பசி!' - என்றது பெருமீன்.

செம்பியன் செல்வன்

பணிவிடை பெறவல்ல, பணிவிடை செய்ய வந்தேன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிராத செல்வம் பயனற்றதாகும்!

வாழ்க்கை நிலையற்றது. வாழ்க்கை நிலையானது என எண்ணி இறுமாப்படைவது மடமைத்தனமானது. எனினும் பலர் ஆசையினாலும், சுய நலத்தாலும் தூண்டப்பட்டு தம்வாழ்வு மட்டும் நிலையானது என நினைக்கின்றனர். இதனால் மற்றவர்களையும் மதிக்காமல், மற்றவர்களுடன் தம்மிடம் உள்ளவற்றைப் பகிராமல் வாழ்கின்றனர். இத்தகைய வாழ்வு கருத்தற்றது.

செல்வம் நிலையற்றது என்பதைப் புரிந்து கொள்ளாமை இன்று காணப்படும் மிகப்பெரிய அறியாமை ஆகும். இதனால்தான் இயேசு "எவ்வகைப பேராசைகளுக்கும் இடங்கொடாதவாறு எச் சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது" என்றார். (லூக்கா 12:15)

இயேசு கூறிய பின்வரும் 'அறிவற்ற செல்வன்' உவமையும் செல்வத்தின் நிலையாமையை விளக்க பொருத்தமானதாகும். செல்வந்தனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அவன் நான் என்ன செய்வேன்? என் விளைபொருளைச் சேர்த்து வைக்க இடமில்லையே என்று எண்ணினான். 'ஒன்று செய்வேன் என்று தனக்குள் கூறிக் கொண்டான். ஆனால் கடவுள் அவனிடம் அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். அப்போது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்? என்று கேட்டார்.

நிலையற்ற செல்வத்தைப் பகிர்ந்து கொடுப்பதே வாழ்வுக்கு அர்த்தம்தரும் என்பதை நக்கீரனாரின் புறநானூற்றுப்பாடல் தெளிவாக்குகின்றது.

'தென்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
ஒருநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே.

பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
அதனால் செல்வத்தும் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே.

(புறநானூற்றுப்பாடல் 189)

அரசனுக்கும் வேடனுக்கும் அடிப்படைத் தேவைகளான உணவும் உடையும் பொதுவாகவே அமைந்துள்ளன. எனவே செல்வம் உள்ளவர்கள் மற்றவர்களுக்கு கொடுப்பதுதான் நல்லது. பகிர்ந்து கொடுக்காமல்விட்டால் அச்செல்வம் வைத்திருப்போருக்கும் பயன் தராமல் போய்விடும்.

எனவே பகிராமல் செல்வத்தைச் சேர்ந்து "நான் மட்டும் வாழலாம்" என நினைப்பது மடமையாகும். ஏனெனில் வாழ்வு நிலையானதல்ல. பகிராத செல்வம் பயனற்றுப் போய்விடும்.

நிலையற்ற செல்வம்
நிறைவைத்தராது
பகிராத செல்வம்
பயனற்றுப் போகும்.

- அருட்பணி S.D.P.செல்வன்
தூய ஆவியானவர் ஆலயம்,
வவுனியா.

# நூல் அறிமுகம்



நூல் - பழையதும் புதியதும்
ஆசிரியர் - பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்
பதிப்பு - செப்ரெம்பர், 2004.
வெளியீடு, விலை } குறிப்பிடப்படவில்லை

இறையியல் காளஞ்சியம், என்னும் காலாண்டிதழில் ஆயர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் வரலாற்று நோக்குடன் பல அரிய தகவல்களையும் - இலக்கியங்களையும் - சமயத் தொண்டர்களையும் ஆதாரத்துடன் தந்துள்ளார்.

18 கட்டுரைகள் உள்ளடக்கிய இந்நூலுக்கு உலக கிறிஸ்தவத் தமிழ் பேரவைப் பொதுச்செயலாளர் மோ.மைக்கேல்பாரமே அணிந்துரை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



நூல் - என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்
ஆசிரியர் - அருட்பணி V.N.தர்மகுலசிங்கம்.
வெளியீடு, விலை, பதிப்பு } குறிப்பிடப்ப்டவில்லை

இன்றைய திருச்சபையில் காணப்படும் குறைபாடுகளையும் - கீழ்த்தரங்களையும் துணிந்து இந்நூலின் மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

மருதனார்மட இறையியல் கல்லூரி விரிவுரையாளராகக் கடமையாற்றிய அருட்பணி தர்மகுலசிங்கம் பல சமூக - சமய கலைப்பணிகளையும் ஆற்றியுள்ளார்.

இவர் பல்வேறுப்பட்ட சஞ்சிகைகள் - பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளையும், ஒருசில கவிதைகளையும் இந்நூலில் இணைத்துள்ளார்.



நூல் - ஜீவ பாதை
ஆசிரியர் - போதகர் எட்வேட் செல்வசீலன்
இதழ் - 09 (மே.ஜூன் - 2004)
வெளியீடு - சத்யாலம்
சந்தா - வருடம் ரூபா 100 (தபால் செலவு உட்பட)
விலாசம் - 32/6, சுபோதாராம வீதி, தெஹிவளை.

பல்வேறுபட்ட கிறிஸ்தவ கட்டுரைகள் உள்ளடங்கியுள்ளது. இச் சஞ்சிகை வடிவமைப்பில் முன்னேற்றம் காணவேண்டிய அதேநேரம், உள்ளடக்கத்திலும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது.

# தெளிவுப் பெட்டகம்

## தெளிவு சிறப்பாகவுள்ளது

அன்பின் ஆசிரியருக்கு!

தெளிவு மிகவும் தரமாக வெளிவருகின்றது. ஆக்கங்களும் சிறப்பாகவுள்ளன. மென்மேலும் தெளிவு வளர்ச்சிபெற வாழ்த்துகின்றேன்.

அருட்பணி H.N.ஏபிரகாம்
ஆசிரியர் - அருள்ஊற்று
தலவாக்கலை

## மெய்விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும்

அன்பின் ஆசிரியருக்கு!

தங்கள் வெளியீடான தெளிவு பத்திரிகை எமது சபையிலுள்ள சிங்கள போதகர் ஒருவருக்கு வந்தது. அவரிடம் பெற்று தெளிவை வாசித்தேன். கிறிஸ்தவர் மத்தியில் மெய்விசுவாசத்தை வெளிப்படுத்தும் பத்திரிகையாக தெளிவு திகழவேண்டுமென வாழ்த்துகிறேன். தொடர்ந்தும் தெளிவை அனுப்பி வையுங்கள்.

திரு, K.அருட்செல்வன்
கொழும்பு - 06

## தெளிவுக்கு ஓர் வாழ்த்து

தெளிவு தெவிட்டாத தேனினிமை
தெளிவு தரும் தேவஞானம்
தெளிவு தென்றலாய் வீசும் சந்தனக் காற்று
தெளிவைப் படித்தவர்கள் தெளிவாகி விட்டார்கள்
தெளிவு ஒழிவு மறைவு இல்லாத ஒளிச்சுடர்
தெளிவைப் படிப்பதில் உள்ளமும் ஒரு தெளிவு பெறும்
தெளிவு இருளுக்கு ஒரு விளக்கு
தெளிவு விளக்கமான விரிவான புதிர்
தெளிவு தேசமெல்லாம் பரவிட
தெளிவினால் மனுக்குலம் செழிக்க
இறைவனை வேண்டுகின்றேன்.

அருட்சகோதரன் மு.குணசேகரம்
கிறிஸ்து நாதர் ஆலயம்,
தெனியாய.

## வரலாற்று நிகழ்வுகள் வேண்டும்

அன்பின் ஆசிரியருக்கு!

ஹட்சின்ஸ் அம்மையாரின் வாழ்க்கை அனுபவத்தை குறித்தும், அவரைப் பற்றிய வரலாற்றுப் பக்கங்களையும் தொகுத்து 'தெளிவு' இதழில் எழுதி வந்த திருமதி ஈவா ஞானப்பொன்ராஜா பராட்டப்பட வேண்டியவர். இது போன்ற சம்பவங்களையும், கட்டுரைகளையும் 'தெளிவு' மேலும் வெளியிட வேண்டும்.

சகோ. ரஞ்சித் விக்டர்.
ஊவா, கிழக்குப் பிராந்தியம்.

# பயனுள்ள தாலந்து

விண்ணரசின் மறைபொருளை இயேசு
வெவ்வேறு உவமையில் கூறினார்.
நெடுந்தூரம் பயணிக்கும் ஒருவன் தன்
பணியாளர் மூவரை அழைத்து
ஐந்திரண்டு ஒன்று என்றளவில்
அவர்கட்டு தாலந்தை பகிர்ந்தளித்து
வரும்வரை உழைத்திட வழிவகைகூறி
வெளிநாட்டுக்கு பயணம் தொடர்ந்தான்.

பலகாலம் சென்றபின் நாடு திரும்பி
பணியாளரிடம் காணிக்கை கேட்டான்
ஐந்து தாலந்து பெற்றவன் பணிந்து வந்து
ஐயா மேலும் ஐந்து உழைத்தேன்
இரண்டு பெற்றவன் அவ்வாறாக
இரண்டு தாலந்துகள் உழைத்தேனென்றான்
அதிகாரி மகிழ்ந்து அவர்களைப் புகழ்ந்து
பாராட்டும் பரிசிலும் அவர்க்குக்
கொடுத்தான்

ஒன்று பெற்றவன் அதிகாரியிடம்
பயத்தினால் நிலத்தில் புதைத்தேன் என்றான்
பெருமை கொண்ட அதிகாரியவனை
பலவாறாகக் கோபித்து உரைத்து
இல்லாதவனின் தாலந்தைப் பறித்து
உள்ளவனுக்கு கொடுக்கச் சொன்னான்
பயன்படுத்த திறமைகள் எல்லாம்
பயனுடையோர்க்கே அளிக்கப்படும்.

அபிராஜன்

# இலட்சியம் வேண்டும்

இலட்சியம் - அது
இல்லாதவன் வாழக்கை
பூஜ்ஜியம்
எட்டாத உயரத்தில்
இருப்பதை - நீ
கொட்டாவி விட்டுப்
பார்க்காமல் - அதை
எட்டிப் பிடித்திட
இலட்சியம் வேண்டும்.

குறிபார்த்து அம்பு
எய்தால் - அது
குறித்த இடம் போய்ச்சேரும்.
தத்தளிக்கும் கப்பலுக்கு
நடுக்கடலில் - அது
தரைசேர மிளிரும் கலங்கரை
விளக்காய்
இறுதிவரை இன்பம் -
உன்வாழ்வில் தவழ்ந்திட
இலட்சியம் வேண்டும்.

கடல் அலைக்கு
இலட்சியம் - அங்கே
கரையை எட்டி முத்தமிடுவது.
கதிரவனுக்கு
இலட்சியமுண்டு - அதுதான்
கதிராலே உலகை ஒளிர்விப்பது.
படைப்பிலே உயர்ந்து நிற்கும்
மானிடனே!
உனது இலட்சியம் - நீண்ட இவ்
உலக வாழ்வை வெல்வது!

அ.துஷ்யந்தன்
புனித மருத்தீனார்
குருமடம்,
யாழ்ப்பாணம்.




# மன்னித்தால் எதிர்காலம்

சுட்டிக்கதை

நீண்ட மௌனத்தின் போது
அந்த சின்ன ஓட்டகம்
பெரியோர் செய்த பிழையை
சிறியோர் மன்னிப்பது கடனே என்றது
எல்லாருக்கும் ஒரே சிரிப்பு
தலைகீழாய் சொன்ன
உடனே பெரும் சிரிப்பு சிரித்துவிட்டு
நான் மன்னிப்பதைப்பற்றிச் சொல்லிக் கொண்டு
கோபமாய் இருந்தால்
ஏன் சொல்லுறன் என்றால்
சாட்சிகளின் மேலாடைகளுக்கு சவுல் தான் காவல்
அவர் எங்கட தலைவரைக் கண்டுட்டு
நீயும் அங்கால அனுதாபம் காட்டுறாய் என்று
கேள்விப்படுறன்
வலு கவனம்
நண்பன் என்று கூட பார்க்கமாட்டன்
யூத சட்டம் தான் முக்கியம்
என்று சொன்னவர் அப்ப
இப்ப ஓடி வந்து கட்டிப் பிடிச்சு
கோபம் பராட்டாம என்னை தேடி வந்ததுக்கு
அதென்ன கதை அன்பு வன்மம் வைக்காது
அல்லேலுயா ஆண்டவரே நன்றி என்று சொல்ல
எங்கட தலைவரை இரண்டு கன்னத்தாலயும் பொலு
பொலு என்டு விழ
என்ர கண்ணே கலங்கிச்சு
அப்ப அப்படிச் சொன்னவர் இப்ப எப்படி
மாறிவிட்டார்
மன்னிப்பின்றி எதிர்காலம் இல்லை.

~ சாமியார்.

# ...யருள் தாரும்

இயேசுவே வாரும்
என்னில் எழுந்து வாரும்
விண்ணில் இருந்து வாரும்
நிலையான வாழ்வைத் தாரும்
நிறை அருள் பொழிந்தருளும்

அப்பத்தின் நடுவில்
ஒளிரும் தேவா
ஆவியின் அருளை
பொழிந்திடு நாதா
பாவி என்னை
மீட்க வா வா
பலிப் பொருளானேன்
ஏற்றிடையா

இறை வார்த்தை
என்னுள் இறங்கனும்
மறை வாழ்க்கை
எனக்குள் இயங்கனும்
குறையில்லை வாழ்வை
அருளும் தேவா
நிறை அருள் தா நாதா

- டிமெல்
கொழும்புத்துறை.

# மக்கள் தொடர்ந்தும்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது நாட்டின் அரசியல் வாதிகள், எமது நாட்டின் இயற்கை வளங்களை விருத்தி செய்ய திட்டமிடாமல், வெளிநாட்டின் உதவிகளையும் கடன் திட்டங்களையும் நம்பி, கையேந்தி முழுநாட்டையும் கடனில் ஆழ்த்தும் தன்மை அரசியல் தலைவர்களிடம் இருந்து வருகின்ற ஒரு இழிதகமைச் செயலாகும். தமது ஆட்சிக் காலத்தினை கொண்டிழுப்பதற்கு கடன்பட்டு ஆட்சி புரிகின்றனர். இவர்கள் குறுகிய நோக்கை நிறைவேற்ற செயற்படுகின்றார்களே தவிர நீண்ட காலத் திட்டமும் தீர்க்க தரிசன பார்வையும் இல்லை. இவைதான் மக்களின் துயருக்கு ஆணிவேராக இருக்கின்றது.

வடபகுதியைப் பொறுத்தவரையில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய வளங்கள் அதிகம் இருக்கின்றது. ஆனால் உயர்பாதுகாப்பு வலய்ங்கள் என்ற போர்வையில் விவசாய நிலங்கள் கடல் பிரதேசங்கள் என்பவற்றில் தொழில் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மக்கள் விவசாயத்தையும் - மீன் படியையும் மேற்கொள்வார்கள் என்றால், வடபகுதி பொருளாதாரத்தில் மேம்பாடு காணும் இதைப்போல சீமெந்துத் தொழிற்சாலை போன்று இயங்காமல் இருக்கின்ற தொழிற்சாலைகள் இயங்கினால் நாடு அபிவிருத்தி காணும். மக்களும் பயனடைவார்கள்.

அரசு தொடர்ந்தும் அசமந்த போக்காக செயற்பட்டால், மக்கள் போராட்டம் வெடித்து, அமைதிக்கும் இயல்பு வாழ்க்கைக்கும் வழிகாணும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பது உறுதி. ஏனெனில் மக்கள் தொடர்தும் இன்னல்களையும் உள அழுத்தங்களையும் சுமந்து வாழ்வியலை நகர்த்த [illegible]

# நீதிக்குள் காணப்படும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தர அமைதி என்பது ஒடுக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையே ஏற்படுகின்ற புரிந்துணர்வு நிலையாகும். சமூகத்தில் ஒரு காலத்தில் ஒடுக்கப்படுபவர்கள் பின்னர் ஒடுக்குபவர்களாகவும் மாறுவதை அவதானிக்கலாம். இது ஓர் பலப்பரீட்சை ஆகும்.

ஆரம்பத்தில் யூதர்கள் வேற்று நாட்டவரால் கைதிகளாக்கப்பட்டு வாழ்ந்த போதிலும், பின்னர் யூதர்கள் வேற்று நாட்டவரை தமக்கு அடிமைகளாக்கி கொண்டனர். எனவே இங்கு புரிந்துணர்வு நிலை அகன்று பழிவாங்கும் நிலை உருவாகின்றது. இது அமைதி நிலைக்கு தடையாக இருப்பதைக் காணலாம்.

எனவே ஒவ்வொரு தனிமனிதனும் தனக்குள்ளாவது பிறருடனாவது, சமூகத்துடனாவது, இயற்கையுடனாவது அமைதியை பேணவேண்டும். ஆனால் முதலில் சமாதானத்திற்காக உழைக்கும் மக்களுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் துன்புறும் மக்களின் குரலாக அவர்கள் மாறவேண்டும். தேவையேற்பட்டால் ஒடுக்குபவரை சவால் இட அழைக்கப்படுகின்றார்கள். ஈற்றில் எல்லாவற்றுக்கும் மேலாக தன்னை அர்பணிக்க அழைக்கப்படுகிறார்கள் என்றார்.

இப்பயிற்சி பட்டறையில் "சமாதானத்தின் பார்வையில் விடுதலைப் போராட்டம்" என்ற தலைப்பில் அருட்பணி எஸ்.டி.பி. செல்வனும், 'சமாதானத்தின் பார்வையில் ஒவ்வொரு தனிமனிதனும்' என்ற தலைப்பில் அருட்பணி வின்சன் பற்றிக்கும், (OMI) 'சமாதானத்தின் பார்வையில் தனிமனித சட்டம்' என்ற தலைப்பில் சட்டத்தரணி தயாபரனும் உரையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறியோரை என்னிடம் வரவிடுங்கள்

இல. 452, பிரதான வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள 'தெளிவு வட்டத்'தினால், இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள 'சுரபி' பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியர்: வீ.பீ.தனேந்திரா.